தினமலர்
உண்மையின் உரைகல்
DINAMALAR
National Tamil Daily

# உலக புவி தின விழிப்புணர்வு

**கோவை, ஏப். 23–**

உலக புவி தினத்தை முன்னிட்டு, வனமரபியல் மற்றும் மரப்பெருக்கு நிறுவனத்தின்(ஐ.எப்.ஜி.டி.பி.,) சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மையத்தில், விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

பிளாஸ்டிக்கால் ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்னைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

ஐ.எப்.ஜி.டி.பி., இயக்குனர் குன்னிகண்ணன் பேசுகையில், ''பூமியின் இயற்கை வளங்களை பொறுப்புடன் பயன்படுத்துவது, மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இயற்கை வளங்களை புத்திசாலித்தனத்துடனும், திறமையாகவும், பயன்படுத்துவதன் வாயிலாக தனிநபர்கள், இந்த கிரகத்தை பாதுகாப்பதில், பங்களிக்க முடியும்,'' என்றார்.

முதுநிலை முதன்மை விஞ்ஞானி, ரேகா வாரியார், சுற்றுச்சூழல் தகவல் பரப்பு மைய மூத்த திட்ட அலுவலர் விக்னேஸ்வரன் உள்ளிட்டோர், பிளாஸ்டிக்கால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தனர். நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, பள்ளி மாணவர்கள், பொதுமக்களிடம், விழிப்புணர்வு நோட்டீஸ்கள் வழங்கப்பட்டன. முன்னதாக, ஐ.எப்.ஜி.டி.பி., இயக்குனர் குன்னிகண்ணன் 'பிளானட் வெர்சஸ் பிளாஸ்டிக்ஸ்' எனும் தலைப்பிலான விழிப்புணர்வு சுவரொட்டியை வெளியிட்டார்.

பூர்வீக மரங்களின் முக்கியத்துவம் குறித்த தகவல்கள் அடங்கிய நோட்டீஸ்கள், கையேடுகள் காஸ் மியூசியத்துக்கு வந்த பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டன.

23. News in Dinamalar, Coimbatore, 23.04.2024, Observance of Earth Day by ICFRE-IFGTB EIACP.